**கவனிக்க**.- 04.09.2025 ஆந் திகதிய 2453 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2454 - 2025 සැප්තැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.09.12

2454 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1460 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு** முன்னர், அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1457 - B 82718- 403 (2025/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, ஓகத்து 21.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| குருநாகலை | குளியாப்பிட்டி மேற்கு | மயுராவதி கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கடுகம்பளை ஹத்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகலை. |
| குருநாகலை | குளியாப்பிட்டி கிழக்கு | மெத்தேகெடிய கோறளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கடுகம்பளை ஹத்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகலை. |
| குருநாகலை | பொல்காவலை | உடபொல ஓதொட மேற்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி ஹத்பத்துவ பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகலை. |

09-71

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவி – கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, ஓகத்து 18.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கொழும்பு | ஜயவர்தனபுர கோட்டை | ஜயவர்தனபுர கோட்டை பிரதேசத்தின் மேலதிக (பொது) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

09-104

---

**கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு**

## இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தலுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை** : இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டதற்கமைய பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக (இல. 5 இல் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறைகளுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

| *புள்ளிகளை வழங்குவதற்குரிய பிரதான விடயங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| பதவிக்குரிய துறைகளில் பெற்றுள்ள அனுபவம் | 40 |
| தகவல் தொழில்நுட்பம் / கணினி தொடர்பான இயலுமை பற்றிய தகைமைகள் | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறன்கள் | 10 |
| மொத்தம் | 100 |

**குறிப்பு :-** ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. **கல்வித் தகைமைகள் :** பொருத்தமில்லை.

II. **தொழிற் தகைமைகள் :**

பட்டய சிவில் பொறியியலாளராதல்.
(இப் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்க்கப்படுகையில் பட்டய சிவில் பொறியியலாளர்களுக்காக ஒரு பதவி மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.)

III. **அனுபவம் :**

உரிய தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், உரிய துறையில் நிறைவேற்று தரத்தில் 12 வருட சேவைக்கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்,

(இது தொடர்பாக சேவைக்காலத்தைக் கருத்திற்கொள்கையில் முழுச் சம்பளத்துடனானதும், அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற கல்வி விடுமுறைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.)

IV. **உடல் ரீதியான தகுதி :**

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள்:**

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கப்படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. **வயது :**

2025.10.12 ஆம் திகதி 35 வயதிற்குக் குறைவற்றதாகவும் அன்றைய தினத்தில் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1980.10.12 ஆம் திகதி முதல் 1990.10.12 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள் உள்ளடங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

3. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் உட்பட வேண்டும். நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். இருப்பினும், அந்த அதிகாரியின் முன்னைய சேவைக்காலம் மற்றும் அனுபவம் புதிய பதவிக்கான தகுதி மற்றும் தேவையாக இல்லாதவிடத்து, அவர் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும், மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைகளுக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** : 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950- 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900 - ரூ. 200,770.00 (படி நிலை 20) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 138,370.00 ஆகும். (2027.01.01 ஆந் திகதி வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேரமுகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 18 | |
| | (ஏ) | MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம் | 20 | |
| | (ஐ) | மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம் | 25 | |

| *தொடர் இல.* | | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 02. | **மேலதிக தொழிற் தகைமை :<br>(அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)** | | | 20 |
| | (அ) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா (07 புள்ளிகள்) | 07 | |
| | (ஆ) | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II / இடைநிலை மட்டப் பரீட்சை / கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II / வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | |
| | (இ) | பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| 03. | **தகவல் தொழில்நுட்பம் / கணினி இயலுமை தொடர்பான தகைமை**<br>பல்கலைக்கழமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணினிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | | 05 | 05 |

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு ஆண்டுக்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறனுக்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களை “செயலாளர், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, இல. 35/A, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08”, எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2025.10.12 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி படிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் "நேரடி முறையில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியாளர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்;/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது ரூபா 71,240.00 அல்லது அதற்கு மேலதிகமான மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச்சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்பதாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபன சேவையில் உள்ள அதிகாரிகளால் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு நகல் பிரதியுடன் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது.

(அ) தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(*குறிப்பு*:- ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.)

(இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)

(ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. II இன் படி) மற்றும் மேலதிகமாக தொழிற் தகைமைகளுக்கான (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றளிக்கப்பட்ட பிரதிகள்.

(உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்கள்

(ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி இயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை/ கூட்டுத்தாபன சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.)

*குறிப்பு* - நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் அசல் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக்கப்பட்ட பிரதிகள் உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. தவறான தகவல்களை வழங்குதல்:

விண்ணப்பப் படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

டி.கே. விஜேசிங்ஹ,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 35/ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08,
2025, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

(அலுவலக பாவனைக்கு மட்டும். )

(பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

*குறிப்பு*: விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ……………………………………………………………………………
(சிங்களத்தில் /தமிழில்)

(ii) முழுப்பெயர் : ……………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ……………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K

02. (i) நிரந்தர முகவரி :……………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான | | | | | | | | | | |

கையடக்க | | | | | | | | | | |

03. (i) பால் நிலை: ……………………………………
(ii) விவாகமானவர் /விவாகமாகாதவர் என்பது பற்றி: ………………………………………

04. (i) பிறந்த திகதி :
ஆண்டு:…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2025.10.12 திகதிக்கு வயது:
வருடங்கள்:……….. மாதங்கள்: …………. நாட்கள்: ………..

(iii) தாங்கள் இலங்கை குடியுரிமையை வம்சாவளி மூலம் அல்லது பதிவின் மூலம் பெற்றுள்ளீர்களா என்பது? ………………………………………………………………

(iv) இனம் :………………………………….

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வித் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ……………………………..
(ii) திணைக்களம் /நிறுவனம் : ……………………..
(iii) நியமனத் திகதி : ………………….

(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: ………………………………

(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : …………………………

(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : ……………………………

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………

(ii) ………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………

திகதி : ……………………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், 2025 ……. மாதம் ….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

……………………………..……………..

கையொப்பத்தினை சான்றுபடுத்தியவரின் கையொப்பம்

திகதி : …………………………………………..…………

இடம் : ………………………………….…………………….

(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………… அவர்கள் ………………….. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் /நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், 2025 ......................... மாதம் ……….. ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

…………………………………………………………………

அரசாங்க /மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி : …………………………

9-112

## கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

## இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2366/31 ஆம் இலக்க மற்றும் 2024.01.12 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைவாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவியில் நிலவும் 11 வெற்றிடங்களுக்கு இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4.1.1 ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. **தொழிற் தகைமைகள்** :

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் அசோஸியேட் அங்கத்துவம்.

அல்லது

உயர் நீதிமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட வழக்கறிஞராக இருத்தல்.

II. **கல்வித் தகைமைகள்** :

பொருத்தமற்றது

III. **அனுபவம் :**

பொருத்தமற்றது

IV. **உடல் ரீதியான தகுதி :**

இலங்கைக்குள் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள்:**

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.

(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கப்படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. **வயது** :

2025.10.12 ஆம் திகதி 22 வயதிற்குக் குறைவற்றதாகவும் அன்றைய தினத்தில் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1990.10.12 ஆம் திகதி முதல் 2003.10.12 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள் உள்ளடங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

(அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

**குறிப்பு** : இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யும் போது சேவைத் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு தேவையான சந்தர்ப்பத்தில் உயர் நீதிமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட வழக்கறிஞர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யும் அதிகாரத்தினை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு கொண்டுள்ளது. அவ்வாறு நேரடியாக ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் மேலே 2.V இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் உட்பட வேண்டும். நீங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் மற்றும்; அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும், மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் எதிர்காலத்தில் விதிக்கப்படும் / விதிக்கப்படக்கூடிய நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950- 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ. 200,770.00 (படி நிலை 01) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 86,950.0 ஆகும். (2027.01.01 வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.

| *தொடர் இல.* | *விடயம்* | | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | பட்ட மேற்படிப்பு டிப்ளோமா (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 18 | |
| | (ஏ) | MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம் (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 20 | |
| | (ஐ) | மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம் (அரச முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரச நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரச முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரச கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 25 | |
| 02. | மேலதிக தொழிற் தகைமை (அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | | 20 |
| | (அ) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா | 07 | |
| | (ஆ) | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II / இடைநிலை மட்டப் பரீட்சை /கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II/ வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | |
| | (இ) | பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (Fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| 03. | பதவிக்குரிய துறையில் பெற்றுள்ள அனுபவம் | | | 40 |
| 04 | தகவல் தொழில்நுட்பம் / கணினி இயலுமை தொடர்பான தகைமை | | | 05 |
| | பல்கலைக்கழமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணினிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | | 05 | |
| 05. | நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமை | | | 10 |
| | **மொத்தம்** | | | **100** |

6. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் “செயலாளர், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, இல.35/A, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08”, எனும் முகவரிக்கு 2025,ஒற்றோபர் 12 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல. 08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் / வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது ரூபா 71,240.00 அல்லது அதற்கு மேலதிகமான மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச்சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்பதாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபன சேவையில் உள்ள அதிகாரிகளால் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைக்கலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு நகல் பிரதியுடன் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது.

(அ) தேசிய ஆளடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(குறிப்பு:- ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.).

(இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. I இன் படி) மற்றும் மேலதிகமாக தொழிற் தகைமைகள் (இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றளிக்கப்பட்ட பிரதிகள்.

(உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்கள்.

(ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி இயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை / கூட்டுத்தாபன சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.)

குறிப்பு - நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் அசல் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக்கப்பட்ட பிரதிகள் உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பப் படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதியின் II (அ) ஆம் பந்தியில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க சேவையின் நியமனங்கள் தொடர்பிலான பொது நிபந்தனைகள் இந்த பதவிக்கான ஆட்சேர்ப்புகளுக்கும் பொருத்தமானதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

12. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி முதல் மூன்று கிழமைகளுக்குள் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும். அத்தகைய அறிவிப்பு எதுவும் கிடைக்கப்பெறாவிட்டால், அது குறித்து உடனடியாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

டி.கே. விஜேசிங்ஹ,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 35/ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08.
2025.09.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024**

(அலுவலக பாவனைக்கு மட்டும். )

(பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்திற்கு மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழிமூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ……………………………………………………………………
(சிங்களத்தில் /தமிழில்)

(ii) முழுப்பெயர் : ……………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: ……………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K

02. (i) நிரந்தர முகவரி :……………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான

கையடக்க

03. (i) பால் நிலை: ……………………………………
(ii) விவாகமானவர் /விவாகமாகாதவர் என்பது பற்றி: ………………………………………

04. (i) பிறந்த திகதி :
ஆண்டு:…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2025.10.12 ஆம் திகதிக்கு வயது:
வருடங்கள்:……….. மாதங்கள்: ………….. நாட்கள்: ………..

(iii) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

05. (i) இந்த பதவிக்குரியதாக கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வித் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ……………………………..
(ii) திணைக்களம் /நிறுவனம் : ……………………..
(iii) நியமனத் திகதி : …………………
(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: ………………………………
(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : …………………………
(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : ………………………….

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………
(ii) ……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………
திகதி : ……………………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், 2025 ……. மாதம் ….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

…………………………….………………..
கையொப்பத்தினை சான்றுபடுத்தியவரின் கையொப்பம்

திகதி : …………………………………………….…………
இடம் : …………………………………….…………………
(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………… அவர்கள் …………………. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் /நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், 2025…..;.. மாதம் ………. ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

…………………….……………………….……………………………
அரசாங்க /மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி : …………………………

09-113

---

## இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் காணப்படும் பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் கல்வித் தகைமை / தொழில்சார் தகைமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2025.09.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, “பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலும் இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்).

**குறிப்பு:-** ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பிக்க வேண்டும்.

1. **மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் பதவி [வெற்றிடம் 01]**

1.1 **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 51,020 - 11 x 590 - 10x 680 - ரூ. 64,310.00 (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக் குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 89,000.00) ஆகும்.

1.2 **வயதெல்லை :**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

1.3 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் அடங்கலாக ஆங்கில மொழியில் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

1.4 **தொழில்சார் தகைமைகள் :**

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தால் அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தால் / அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு தனியார் நிறுவனத்தால் நடத்தப்படும் மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பான 3 வருடங்களுக்குக் குறையாத ஒரு முழு நேரப் பாடநெறியைப் பின்பற்றி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

சகல வகையான மோட்டார் வாகனங்களையும் ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

(மோட்டார் வாகன தொழில்நுட்ப விடயம் தொடர்பான NVQ 4 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான அத்தகைய ஒரு சான்றிதழ் பத்திரப் பாடநெறியைப் பின்பற்றியிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.)

1.5 **அனுபவம் :**

அரசாங்க / அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனத்தில் மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் தொடர்பான விடயத்தில் 5 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

1.6 **ஆட்சேர்ப்பு முறை** :

எழுத்துமூலப் பரீட்சை, தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

1.7 **பரீட்சை நடைமுறை :**

(அ) **எழுத்துமூல மற்றும் தொழில்திறன் பரீட்சைகள் :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும்/தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தொழில் பயிற்சி நிறுவனம்/ மேற்பார்வைக் குழு மூலம் நடத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சை, தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

| *பரீட்சை* | *பரீட்சிக்கப்படுகின்ற விடயப் பரப்புகள்* | *வழங்கப்படும் ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் மற்றும் பராமரிப்புத் தொடர்பான அறிவு | 100 |
| தொழில்திறன் பரீட்சை | மோட்டார் வாகனத் தொழில்நுட்பம் மற்றும் பராமரிப்புத் தொடர்பான தொழில்சார் அறிவும் திறமையும் | 100 |

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

எழுத்துமூல மற்றும் தொழில்திறன் பரீட்சைகளில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது கீழ்காணும் தகவுதிறன்களுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறாகும் (100).

| *தொடர் இலக்கம்* | *விடயப் பிரிவு* |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

2. **உதவி களஞ்சியப் பொறுப்பாளர் பதவி - [வெற்றிடம் 01]**

2.1 **சம்பள அளவுத்திட்டம்** :

25.03.2025 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 51,020 - 11 x 590 - 10x 680 - ரூ. 64,310.00 (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 89,000.00) ஆகும்.

2.2 **வயதெல்லை** :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

2.3 **கல்வித் தகைமைகள்:**

கல்வித் பொதுத் தராதர (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் அடங்கலாக ஆங்கில மொழியில் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2.4 **தொழில்சார் தகைமைகள் :**

வழங்கல், பொருட்கள் முகாமைத்துவ நிறுவகத்தால் வழங்கப்பட்ட களஞ்சியப்படுத்தல் / களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் மற்றும் தரவு உள்ளீடு, கணினிப் பாவனை பற்றிய அடிப்படை அறிவு ஆகியவற்றைப் பெற்றிருத்தல்.

2.5 **அனுபவம் :**

அரசாங்க / அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனத்தில் உதவி களஞ்சியப் பொறுப்பாளராக ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2.6 **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

2.7 **பரீட்சை நடைமுறை** :

(அ) **தொழில்திறன் பரீட்சை:**

இதன்போது விண்ணப்பதாரர்களுக்கு இருக்கின்ற குழாய் வேலைத்திறன்கள் பற்றிய அறிவு, திறமை மற்றும் தேவையான திறன்கள் என்பன பரிசீலிக்கப்படும். பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறாகும் (100).

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

நேர்முகப் பரீட்சையின் போது கீழ்க்காணும் தகவுதிறன்களுக்கு அமைய புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறாகும் (100).

| *தொடர் இலக்கம்* | *விடயப் பிரிவு* |
|---|---|
| 01 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 02 | விடய அறிவு |
| 03 | அனுபவம் |
| 04 | ஆளுமை மற்றும் நேர்முக பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

3. **வர்ணம் தீட்டுநர் – [வெற்றிடம் 01]** :

3.1 **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,240 - 9 x 540 -10x 590- 3 x 680 - ரூ. 60,040.00 (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்பச் சராசரி மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 85,000.00) ஆகும்.

3.2 **வயதெல்லை :**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.3 **கல்வித் தகைமைகள்:**

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(குறிப்பு -வர்ணம் தீட்டும் பிரிவில் NVQ 3 சான்றிதழை அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு சான்றிதழைப் பெற்றிருந்தால் மேற்குறிப்பிட்டவாறு க.பொ.த. (சா./த.) சித்தியடந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை).

3.4 **தொழில்சார் தகைமைகள்:**

வர்ணம் தீட்டும் / கட்டுமானப் பிரிவில் NVQ 3 சான்றிதழைப் பெற்றிருத்தல்.

3.5 **அனுபவம் :**

அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனத்தில் வர்ணம் தீட்டும் பிரிவில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

3.6 **ஆட்சேர்ப்பு முறை :**

தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

3.7 **பரீட்சை நடைமுறை:**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் ஒரு மேற்பார்வைக் குழு மூலம் நடத்தப்படும் தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

(அ) **தொழில்திறன் பரீட்சை** :

இதில் வர்ணம் தீட்டும் பிரிவில் விண்ணப்பதாரியின் தொழில்நுட்ப அறிவு, தேர்ச்சி, தேவையான திறமைகள் என்பன பரீட்சிக்கப்படும். பெற்றுக்கொள்ளக் கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை** :

நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெறக்கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *விடயப் பிரிவு* |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

4. குழாய் சுத்தப்படுத்துநர் – [வெற்றிடம் 01] :

4.1 **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,240 - 9 x 540 - 10x 590 - 3 x 680 - ரூ. 60,040.00 (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 85,000.00) ஆகும்.

4.2 **வயதெல்லை :**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.3 **கல்வித் தகைமைகள்:**

க.பொ.த. (சா /த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(குறிப்பு – குழாய் பொருத்தும் பிரிவில் NVQ 3 சான்றிதழை அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு சான்றிதழைப் பெற்றிருந்தால் மேற்குறிப்பிட்டவாறு க.பொ.த. (சா/த) சித்தியடந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை)

4.4 **தொழில்சார் தகைமைகள்:**

குழாய் பொருத்தும் பிரிவில் NVQ 4 சான்றிதழைப் பெற்றிருத்தல்.

4.5 **அனுபவம்:**

அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனத்தில் குழாய் பொருத்தும் பிரிவில் 3 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

4.6 **ஆட்சேர்ப்பு முறை :**

தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

4.7 **பரீட்சை நடைமுறை:**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் ஒரு மேற்பார்வைக் குழு மூலம் நடத்தப்படும் தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

(அ) **தொழில்திறன் பரீட்சை:**

இதில் விண்ணப்பதாரியின் குழாய்வேலை தொடர்பான தொழில்நுட்ப அறிவு, தேர்ச்சி, தேவையான திறமைகள் என்பன பரீட்சிக்கப்படும். பெற்றுக்கொள்ளக் கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெறக்கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| தொடர் இலக்கம் | விடயப் பிரிவு |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

5. **வீடு பராமரிப்பு உதவியாளர் பதவி – [வெற்றிடம் 06]** :

5.1 **தொழிலின் தன்மை** :

பாராளுமன்ற வளாகத்தின் சுத்தமும் சுகாதாரமும் பேணப்படுவதை உறுதிசெய்யும் வகையில் உணவு வழங்கல், வீடு பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயல்நோக்கின் கீழ் வருகின்ற உரிய வழக்கமான சுத்திகரிப்பு மற்றும் வீடு பராமரிப்பு ஆகிய கடமைகளை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.

5.2 **மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணையின் பிரகாரம், இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 42,290-9x490-10x540-6x590-ரூ. 55,640.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 80,000.00 ஆகும்).

5.3 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் ஏற்கனவே பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

5.4 **கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்** :

**கல்வித் தகைமைகள்:**

சிங்களம்/தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி அடங்கலாக கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகளுடன் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தில்;

**தொழில்சார் தகைமைகள்:**

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறொரு நிறுவகம் ஹோட்டல் வீடு பராமரிப்பு/அறை சேவை/அறை உதவியாளர் சேவை பிரிவில் வழங்கிய ஐந்து மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கான ஒரு சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

ஹோட்டல் வீடு பராமரிப்பு/அறை சேவை/அறை உதவியாளர் சேவைப் பிரிவில் NVQ மட்டம் II சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அனுபவம்:** குறித்த தகைமைகளைப் பெற்றதன் பின்னர், ஒரு நட்சத்திர ஹோட்டலில் வீடு பராமரிப்பு/அறை சேவை/அறை உதவியாளர் சேவை பிரிவில் ஒரு வருட காலத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5.5 **ஆட்சேர்ப்பு முறை** :

எழுத்துமூல /செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

(அ) **எழுத்துமூல /செயன்முறைப் பரீட்சை :**
மேற்குறித்த பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் எழுத்துமூல/செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்தப் பரீட்சைகள், ஹோட்டல் வீடு பராமரிப்பு/அறை சேவை/ அறை உதவியாளர் சேவை சம்பந்தப்பட்ட பிரிவுகளில் விண்ணப்பதாரர்களின் திறன்களை மதிப்பிடுவதாக அமையும். இந்த மதிப்பீடு ஒரு மணித்தியால எழுத்துமூல/செயன்முறைப் பரீட்சையைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு பரீட்சையிலும் அடையக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை :**

பின்வரும் தகவுதிறன்களின் அடிப்படையில், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். நேர்முகப் பரீட்சையில் அடையக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *தகவுதிறன்* |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறன் |

6. **பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி– [வெற்றிடம் 01]** :

6.1 **சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,240-9x 540-10x 590-3 x 680- ரூ. 60,040.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 85,000.00 ஆகும்.)

6.2 **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தி அடங்கலாக, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

10 வருடங்களுக்குக் குறையாத கௌரவத்திற்குப் பாத்திரமான சேவையுடன் இராணுவ சார்ஜன் அல்லது அதற்குக் குறையாத தரத்திலான ஒரு பதவியை வகிக்கும் இலங்கை ஆயுதப் படை(நிரந்தர) உறுப்பினர் ஒருவராக அல்லது 10 வருடங்களுக்குக் குறையாத கௌரவத்திற்குப் பாத்திரமான சேவையுடன் சார்ஜன் அல்லது அதற்குக் குறையாத தரத்திலான ஒரு பதவியை வகிக்கும் இலங்கைப் பொலிஸின் உறுப்பினர் ஒருவராக இருத்தல்.

அல்லது

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில், பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் 'ஏ' அல்லது 'பீ' சம்பள வகுதிகளின் கீழ் உள்ள பதவியொன்றில் 10 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

6.3. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 30 வயதுக்கு குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6.4. **ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(அ) **எழுத்துமூலப் பரீட்சை** :

| *பரீட்சை* | *பரீட்சிக்கப்படுகின்ற விடயப் பரப்புகள்* | *உச்சப் புள்ளிகள்* |
|---|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | மொழித்திறனும் பொது அறிவும் | 100 |

(ஆ) நேர்முகப் பரீட்சை

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதோடு நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின்படி புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெறக்கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | விடயப் பரப்பு |
|---|---|
| 01 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 02 | விடய அறிவு |
| 03 | அனுபவம் |
| 04 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

7. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. இந்தப் பதவிகளுக்கான ஓய்வூதிய உரிமை, அரசாங்கத்தால் எடுக்கப்படும் எதிர்காலக் கொள்கை முடிவுகளின்படி தீர்மானிக்கப்படும். நியமனம் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு உள்ளக விண்ணப்பதாரர் அல்லது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் ஒரு நிரந்தரப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு (01) வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) (தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

8. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) பிறப்புச் சான்றிதழ் ;
(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(உ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

9. மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான விண்ணப்பதாரர்கள் மட்டும் மேலே குறிப்பிட்ட vii (அ) முதல் (உ) வரையிலான சான்றிதழ்களுக்கு மேலதிகமாக, அனைத்து வகையான வாகனங்களையும் ஓட்டுவதற்குச் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றையும் இணைக்க வேண்டும்.

10. அரசாங்க / மாகாண அரசாங்க நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

11. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

12. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

13. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களும், பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குஷானி ரோஹணதீர,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2025, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

**வெற்றிடங்கள் - 2025**

------------------------------------------------------------------- பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : ..........................................................................................
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..........................................................................................
..........................................................................................
(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (Mr./Mrs./Miss) ..........................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
(ii) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................................

(iii) தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(iv) வட்ஸ்அப் இலக்கம் : | | | | | | | | | | |

(ஆ) (i) அலுவலக முகவரி : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

(ii) தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

(இ) தயதுசெய்து அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக.

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி: ஆண்டு : ............... மாதம் :............... திகதி :...............

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது:

வருடங்கள் :............... மாதங்கள் :............ நாட்கள் :.................

5. சிவில் அந்தஸ்து (திருமணமானவர்/திருமணமாகாதவர்) : .............................................................

6. பால் (ஆண்/பெண்) : ..........................................................................................

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/ இல்லை)

8. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பரீட்சை* | *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| க.பொ.த. (உ/த) | | | |
| | | | |
| | | | |
| | | | |
| க.பொ.த. (சா/த) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| *பாடநெறி* | *நிறுவனம்* | *செயல்வலுப்பெறும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

10. ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) :

(அ) நிறுவனத்தின் பெயர் : ..............................................................................
(ஆ) நிறுவனத்தின் முகவரி : ..............................................................................
(இ) முதல் நியமனத் திகதி : ..............................................................................
(ஈ) தற்போதைய பதவி : ..............................................................................
(உ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ..............................................................................
(ஊ) கொடுப்பனவுகள் : ..............................................................................
(எ) சராசரி சம்பளம் : ..............................................................................

13. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக: ..............................................................................................
..............................................................................................................................................................

14. நீங்கள் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம் / இல்லை)
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக : ..............................................................................................................
..............................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: .................................. ...........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்த நிறுவனத்தில் ................................................................ பதவியை வகிக்கின்ற திரு. / திருமதி / செல்வி ......................... ...................................................................... என்பவரின் விண்ணப்பப் படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தமாக்கப்படவில்லை என சான்றுபடுத்துகின்றேன். இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதிசெய்கின்றேன். இவர் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து நிரந்தரமாக/தற்காலிகமாக விடுவிக்கப்படலாம் (பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக).

திகதி : ...................................... ...............................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

09-169

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*